**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.No.**110/2016 திரு.தேவராஜன் வா.சா.2

**வா.சா.2 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்திருக்கிறேன் என்றால், 10ம் வகுப்பு படித்திருக்கிறேன். 10ம் வகுப்பில் நான் பெயில். வா.சா.ஆ.6 ஐ தட்டச்சு செய்தது பழைய மிசினா, அல்லது கணினியா என்றால், ஞாபகம் இல்லை. முதல் விசாரைணையில் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டுள்ள போது வீட்டு மனைகளாக குறிப்பிட்டுள்ளதா என்றால், இல்லை. வா.சா.ஆ. 6ன் பத்திர எழுத்தர் பெயர் குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை. வா.சா.ஆ.6-ல் ரூ. 40 லட்சம் முதல் பிரதிவாதி வாங்கிக்கொண்டதாக குறிப்பிட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.6-ன் இரசீதில் முகப்பில் தேதி எழுதப்பட்டுள்ளதா என்றால், ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.6-ல் யார் யார் கையெழுத்து போட்டார்கள் என்ற விவரம் முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.6 ல் எண்ணாலும், எழுத்தாலும் எழுதப்பட்ட வாசகங்கள் அனைத்தும் கம்பியூட்டரில் அடித்ததா என்றால், ஆமாம். வா.சா.ஆ.6-ல் யார் அடைப் செய்தார்கள் என்ற விவரம் இல்லை என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6-ல் ரூ.40 லட்சம் முதல் பிரதிவாதி பெற்றுக்கொண்டதாக இருக்கிறதா என்றால், இல்லை. மேலும் அதில் ஆவண எண். 2470 என்பது பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதை யார் எழுதியுள்ளார்கள் என்றால், எனக்கு தெரியாது. மோகன் எனக்கு வேண்டியவர் என்பதால் வா.சா.அ.6 ஆவணம் பிற்பாடு தயார் செய்யப்பட்டு அதில் நான் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளவாறு சப்ரிஜிஸ்டர் அலுவலகத்திற்கு அன்று நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6-ல் தேதி எழுதப்படும் இடத்தில் கேப் இருக்கிறது என்றால், சரிதான். வா.சா.ஆ.6 ஐ பின்சிந்தனையுடன் வாதியால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. 17.04.2013 தேதியன்று முதல்பிரதிவாதிக்கு பணம் வாங்கவில்லை என்றும், வாதி பணம் செலுத்தவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆவண எண்.2470 குறித்து வா.சா.ஆ.6 எனக்கு தெரியாததினால் தான் முதல்விசாரணையில் வா.சா.ஆ.6 எழுதப்பட்ட விவரம் கூட நான் சொல்லவில்லை என்றால், சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒ/ம். திரு.தேவராஜன்    PW2                                    (ஒ/ம். N. Sharmila)

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.